Cambridge International AS Level

**Cambridge International Examinations**
Cambridge International Advanced Subsidiary Level

**TAMIL LANGUAGE** **8689/02**

Paper 2 Reading and Writing **October/November 2014**

**1 hour 45 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*7085954952*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, glue or correction fluid.
DO **NOT** WRITE IN ANY BARCODES.

Answer **all** questions.
Write your answers in **Tamil** on the separate answer paper provided.
Dictionaries are **not** permitted.
You should keep to any word limits given in the questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

**முதலில் என்ன செய்ய வேண்டும் என்று எழுதியிருப்பதைப் படிக்கவும்.**

உங்களுக்கு விடைகள் எழுதுவதற்கு ஒரு புத்தகம் கொடுக்கப்பட்டிருந்தால், அதில் முன் பக்கத்தில் என்ன செய்ய வேண்டும் என்று எழுதியிருப்பதைப் படித்து அதன்படி செய்யவும்.
உங்கள் சென்டர் இலக்கம், மாணவரின் இலக்கம், பெயர் ஆகியவற்றை எல்லா விடைத்தாளிலும் எழுதவும்.
கருநீலம் அல்லது கருப்பு மை இருக்கும் பேனாவால் விடைகளை எழுதவும்.
ஸ்டேப்பிள்கள், கிளிப்புகள் பசை அல்லது திருத்துவதற்கு உள்ள திரவங்கள் ஆகியவற்றை பயன்படுத்த வேண்டாம்.
**ஒரு பார்கோட்டிலும் எழுதக்கூடாது.**

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.
விடைகள் எழுதுவதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் புத்தகத்தில் விடைகளைத் தமிழில் எழுதவும்.
அகராதிகள் பயன்படுத்தக் கூடாது.
விடை எழுதுகையில் சொற்களின் அளவு குறிப்பிடப்பட்டிருந்தால் அதற்குள் விடை எழுதவேண்டும்.

தேர்வு முடியும் போது எல்லா விடைத்தாள்களையும் சேர்த்துக் கட்டிக் கொடுக்கவும்.
ஒவ்வொரு வினா அல்லது வினாப்பகுதியின் இறுதியில் அதற்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் [ ] தரப்பட்டிருக்கும்.

This document consists of **5** printed pages and **3** blank pages.

DC (SJF) 95534/1
© UCLES 2014

CAMBRIDGE International Examinations

**[Turn over**

https://xtremepape.rs/

## பகுதி – 1

கீழே தரப்பட்டுள்ள பத்தியைப் படியுங்கள். பின்னர் வினாக்களுக்கு விடை அளியுங்கள்.

### தலைமுறை இடைவெளி

தலைமுறை இடைவெளி என்றால் என்ன? இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தலைமுறைகள் இடையே நிலவும் கருத்து வேறுபாடுகள் தலைமுறை இடைவெளி எனப்படும். வயது காரணமாகவும், வாழும் சூழ்நிலை காரணமாகவும் இரண்டு தலைமுறைகளுக்கு இடையே பார்வையும் அணுகு முறையும் மாறுகிறது. பெற்றோர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் பல விஷயங்களில், குறிப்பாக கலாசார விஷயங்களில் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர்.

நடை உடை பாவனைகளிலும் வேறுபாடுகளைக் காண்கிறோம். பெண்களின் முடி அலங்காரம், உடைகள் ஆகியன விஷயத்தில் அம்மாக்கள் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். ஆனால் அவர்களின் புதல்விகளோ அம்மாக்கள் "வெறுக்கும்" உடுப்புகளை விலைக்கு வாங்குகிறார்கள். மகன்களும் இப்படித்தான். விலை அதிகம் உடைய 'டிசைனர்' உடைகளையே வாங்குவார்கள். அப்பாக்களுக்கு இதுவும் புரிவதில்லை. இதைவிட நல்ல தரமான ஆடைகள் கிடைக்கும் போது ஒரு 'பிராண்டின்' பெயருக்காக இப்படிப் பணம் கூடக் கொடுக்கிறார்களே என்று புலம்புகிறார்கள்.

டேவிட்டுக்கு வயது 18. பெற்றோர்களுடனும் இரண்டு சகோதரர்களுடனும் அவர் வசிக்கிறார். அவர் சொல்கிறார், "இந்தக் காலத்தில் இளம் வயதுக்காரர்களாக வாழ்வது எளிதல்ல. ஆனால் என் பெற்றோர்கள் மிகவும் நல்லவர்கள். எனது உடைகள் பற்றியோ நான் வீட்டுக்கு தாமதமாக வருவது பற்றியோ ஏதேனும் கருத்து வேறுபாடு இருந்தால் அமைதியாக அது பற்றி விவாதிப்போம். என் கருத்துக்களை அவர்கள் உன்னிப்பாகக் கேட்பார்கள். எனக்கு அவர்களிடத்தில் மிகவும் பிடித்த விஷயம் என்னவென்றால், என்னிடமிருந்து அவர்கள் பல விஷயங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்பதாகும். எடுத்துக்காட்டாக மொபைல் போன்களையோ இன்டெர்னெட்டையோ எப்படிப் பயன் படுத்துவது என்று அறிவார்கள்."

17 வயதான செல்வி ரமாவின் அனுபவம் வேறுவிதமானது. அந்தக் குடும்பத்தில் அவர் ஒரே பெண். அவர் சொல்கிறார், "என் விஷயத்தில் தலைமுறை இடைவெளி பளிச்சென தெரிகிறது. பெற்றோர்களுடன் சுமுக உறவு இல்லை. எனக்கு கார் ஓட்டக் கற்றுக்கொள்ள ஆசை. அவர்களோ எனக்கு அதிக சுதந்திரம் கிடைத்து விடும் என்று பயப்பட்டுக் கொண்டு கார் ஓட்ட அனுமதி மறுக்கின்றனர். மாலை நேரத்தில் என் நண்பர்களுடன் வெளியே போக அனுமதிப்பதில்லை. நான் எப்போதும் எந்தக் கெட்ட செயலும் செய்ததில்லை. பின்னர் ஏன் என்னை சிறு பிள்ளையாகவே நடத்துகின்றனர்?"

கந்தையா என்பவருக்கு இரண்டு இளம் பிள்ளைகள். அவர் கூறுவதைக் கேளுங்கள், "நான் என் பிள்ளைகளை நேசிக்கிறேன். ஆனால் சில நேரங்களில் மோதிக் கொள்வோம். அவர்கள் கொஞ்சம் சுயநலத்துடன் நடந்து கொள்வர். ஆனால் வாழ்க்கையில் போதிய அனுபவம் பெறாததால்தான் அவர்கள் இப்படி நடந்து கொள்கின்றனர். அவர்கள் என் இடத்தில் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு என் கோணத்தில் பார்த்தால் அவர்கள் என்னிடத்தில் மேலும் மரியாதை செலுத்துவர். அவர்கள் நலனுக்காக நான் எப்படிக் கடினமாக உழைக்கிறேன் என்பதைப் புரிந்துகொள்வர். இதைப் புரிந்துகொண்டு என்னை எதிரியாகப் பார்க்காமல் நண்பனாக நடத்தினால் நன்றாக இருக்கும்."

உலகம் வேகமாக மாறிக்கொண்டே இருக்கிறது. இதை யாரும் தடுக்கவும் முடியாது, நிறுத்தவும் முடியாது. மாற்றம் என்பது இயற்கை நியதி என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். அதாவது மொழி, நடை, உடை, பாவனை, உணவு எல்லாம் மாறிக் கொண்டேதான் இருக்கும். தலைமுறை



https://xtremepape.rs/

இடைவெளி எப்போதுமே இருந்துவருகிறது. காலத்துக்கும் புதிய தேவைகளுக்கும் ஏற்ப பெற்றோர்கள் மாறியபோது மகன்களையும் மகள்களையும் குறை சொல்லுவதில் என்ன நியாயம் இருக்கிறது? தலைமுறை இடைவெளி என்பதைப் புரிந்துகொண்டால் போதுமே. வாழ்க்கை மூல்யங்கள் எனப்படும் பண்பாடுகள் மட்டும் மாறாமல் இருந்தால் போதுமே. மனிதர்கள் இடையே பரஸ்பர அன்பு, நம்பிக்கை, மரியாதை, உதவி செய்யும் மனப்பாங்கு, விட்டுக் கொடுக்கும் மனப்போக்கு, சத்தியம் இவைகள் மாறாமல் இருந்தால் தலைமுறை இடைவெளி பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை.

**1** கீழே கொடுத்துள்ள ஒவ்வொரு விளக்கத்திற்கும் மிகப் பொருத்தமான சொல் அல்லது சொற்றொடரை மேலேயுள்ள பத்தியிலிருந்து எடுத்து எழுதுக.

எடுத்துக்காட்டு: புகை வண்டி ஓடும் பாதை – தண்டவாளம்

**(a)** நோக்கு [1]
**(b)** மகள் [1]
**(c)** கவனமாக [1]
**(d)** குழந்தைகள் போல [1]
**(e)** விரோதியாக [1]

[மொத்தம் 5 மதிப்பெண்கள்]

**2** கீழே தரப்பெற்றுள்ள சொல்லின் அல்லது சொற்றொடரின் பொருளும் தெளிவாகக்கூடிய வகையில் அவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

எடுத்துக்காட்டு: அன்பு
விடை – குழந்தைகளிடம் பெற்றோர் அதிகம் அன்பு காட்டுகிறார்கள்.

**(a)** கருத்து வேறுபாடு [1]
**(b)** நடை, உடை,பாவனை [1]
**(c)** எளிதல்ல [1]
**(d)** பளிச்சென [1]
**(e)** நம்பிக்கை [1]

[மொத்தம் 5 மதிப்பெண்கள்]

**3** பின்வரும் வினாக்களுக்கு தமிழில் விடை தருக. பத்தியிலிருந்து சொற்களையோ வாக்கியங்களையோ அப்படியே எடுத்தெழுதாது சொந்த வாக்கியங்களில் விடை தருக.

**(a)** தலைமுறை இடைவெளி எதனால் ஏற்படுகிறது? [2]

**(b)** பெற்றோர்கள் என்ன வகை 'பாஷன்' களை விரும்புவதில்லை? [2]

**(c)** டேவிட்டுடைய பெற்றோர்கள் அவருடன் சுமுக உறவை பராமரிக்க என்ன செய்கிறார்கள்? [3]

**(d)** ரமாவின் பெற்றோர்களுடன் அவருக்கு சுமுக உறவு இல்லாதது ஏன்? [3]

**(e)** **(i)** தலைமுறை இடைவெளி ஏன் ஏற்படுகிறது என்று கந்தையா கருதுகிறார்? [1]

**(ii)** தலைமுறை இடைவெளி குறைய இளைஞர்கள் என்ன செய்யலாம்? [2]

**(f)** தலைமுறை இடைவெளி பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை என்று கட்டுரையாளர் கருதுவது ஏன்? [2]

[விடைகளுக்கு – 15 மதிப்பெண்கள், சிறந்த மொழித் திறன் – 5 மதிப்பெண்கள், மொத்தம் 20 மதிப்பெண்கள்]

© UCLES 2014


https://xtremepape.rs/

## பகுதி – 2

கீழே தரப்பட்டுள்ள பத்தியைப் படியுங்கள். பின்னர் வினாக்களுக்கு விடை அளியுங்கள்.

### வேலை செய்யும் இடத்தில் தலைமுறை இடைவெளி

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் இடையே ஏற்படும் பிரச்சினைகளுக்கு மட்டுமே தலைமுறை இடைவெளி என்ற சொல்லைப் பயன்படுத்தினர். இப்போது வேலை செய்யும் இடத்தில் கூட இந்தப் பிரச்சினை இருக்கிறது. அலுவலகங்களில் காணப்படும் தலைமுறை இடைவெளி பற்றி ஆய்வு செய்யும் திரு ஆர்.ராமநாதன் இப் பிரச்சினை ஏன் ஏற்படுகிறது என்று சொல்கிறார், “பல தலைமுறைகளைச் சேர்ந்த ஊழியர்களின் அனுபவங்கள், லட்சியங்கள், எதிர்பார்ப்புகள் வேறுபடுவதால் இணைந்து வேலை செய்வது கடினமாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஊழியர்களை நிர்வகிக்கும் நிர்வாகிகள் (மானேஜர்கள்) பல தலைமுறை ஊழியர்களின் மனநிலையை அறிந்திருக்க வேண்டும். மேலும் ஊழியர்களின் சொந்த அனுபவத்தின் பேரில் அவர்கள் உலகத்தை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும்,” என்கிறார் ராமநாதன்.

“ஒரே தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கு வயது ஒன்றுதான் பொதுவானது என்று நினைக்கக்கூடாது. அவர்கள் காலத்தில் உலகத்தை மாற்றிய நிகழ்ச்சிகளின் நினைவுகளையும் அவர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள்” என்று ஒரு பெரிய கம்பெனியின் டைரக்டரான கே.யோகராஜா கூறுகிறார். “வேலை பற்றியும் தலைமைதாங்கும் ஆற்றல் குறித்தும் ஒவ்வொரு தலைமுறையும் ஒரே அணுகுமுறையைக் கடைப்பிடிக்கின்றனர்” என்றும் அவர் விளக்கினார்.

“தலைமுறை கருத்துவேறுபாடுகளை ஊழியர்கள் புரிந்துகொள்ள அலுவலக நிர்வாகிகள் உதவவேண்டும். இதற்காக என் நிறுவனத்தில் வேலை பார்ப்போருக்காக நான் அண்மையில் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்தேன். 500 ஊழியர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில், ஒவ்வொரு தலைமுறைக்கும் முக்கியமான கலாசார, வரலாற்று, கலை விஷயங்கள் என்ன என்பதை விளக்கி ஒருவர் சொற்பொழிவு ஆற்றினார். கலை அரங்கில் இருந்த அனைவரும் அதை உன்னிப்பாகக் கேட்டதோடு, பல கேள்விகளைக் கேட்டு சுவையான விவாதத்தையும் ஏற்படுத்தினர். பல தலைமுறையைச் சேர்ந்தோர் வேலை பார்க்கும் இடத்தில் கிடைத்த வெற்றிகளைப் பகிர்ந்து கொண்டதால் பல்வேறு வயது ஊழியர்களிடையே நம்பிக்கை பலப்பட்டது. எல்லா வயதினரும் மற்ற வயதினரை மதிக்கவும் பாராட்டவும் இந்த கருத்தரங்கு உதவும் என்று நான் நினைக்கிறேன். ஒருவர் பிறரால் பாராட்டப்படவும் வாய்ப்புகள் ஏற்படும். பலரும் அனுப்பிய பாராட்டுக் கடிதங்களிலிருந்து இந்தக் கருத்தரங்கு பெரும் வெற்றி என்று என் சக அதிகாரிகளும் உணர்ந்தனர்” என்றார் திரு யோகராஜா.

தலைமுறை இடைவெளியைக் குறைப்பதற்கு யோகராஜா ஒரு நல்ல திட்டத்தைக் கூறுகிறார். “இளம் ஊழியர்களும் வயதான ஊழியர்களும் கருத்துப் பரிமாற்றம் செய்யவேண்டும். ஒரு தலை முறை மற்றொரு தலைமுறையிடமிருந்து பல விஷயங்களைக் கற்றுக் கொள்ளமுடியும். இப்படி ஆலோசனை வழங்க ஆலோசகரை நியமிக்கும் திட்டத்தை நான் கடைப்பிடித்தேன். இது இரு தரப்பினரையும் சம நிலையில் வைக்கும். இதனால் தலைமுறை இடைவெளி மோதல் குறைந்தது. மேலும் இப்படி ஒற்றுமையுடன் செயல்படத் துவங்கிவிட்டால் பழைய, புதிய தலைமுறைப் பேர்வழிகள் என்று நினைக்காமல் வேலையில் முனைப்பு காட்டத் துவங்கிவிடுவர்” என்றும் யோகராஜா சொன்னார்.

அதே நிறுவனத்தில் வேலை பார்க்கும் 55 வயதான கல்யாணராமனுக்கு முதலில் இந்த திட்டம் பிடிக்கவில்லை. “என்னைவிட மிகவும் வயது குறைந்த ஊழியர் நான் சொல்லும் ஆலோசனையை ஏற்கமாட்டார் என்று நினைத்தேன். ஆனால் போகப்போக இது பலன் தரும் திட்டம் என்பதை

© UCLES 2014

https://xtremepape.rs/

புரிந்துகொண்டேன். நான் இளம் வயதினரிடமிருந்து கற்ற விஷயங்கள் அலுவலகத்தில் மட்டுமின்றி குடும்பத்திலும் எனக்குப் பயன்பட்டது. இப்போது 20, 25 வயதான என் பிள்ளைகளிடம் எனக்கு மதிப்பு அதிகரித்திருக்கிறது. இது மட்டுமல்ல. எனக்கு ஆலோசகராக உள்ள இளம் ஊழியர் குடும்பமும் என் குடும்பமும் கூட்டாக விருந்துகளுக்கும் போகிறோம்" என்று சொல்லி மகிழ்ந்தார்.

**4** பின்வரும் வினாக்களுக்கு தமிழில் விடை தருக. பத்தியிலிருந்து சொற்களையோ வாக்கியங்களையோ அப்படியே எடுத்தெழுதாது சொந்த வாக்கியங்களில் விடை தருக.

**(a)** **(i)** வேலை செய்யும் இடங்களில் தலைமுறை இடைவெளி ஏற்பட ராமநாதன் கூறும் காரணங்கள் என்ன? [1]

**(ii)** இதைக் குறைக்க நிர்வாகிகள் என்ன செய்யவேண்டும்? [2]

**(b)** வயது தவிர வேறு என்ன என்ன விஷயங்கள் ஒரே தலைமுறையினரை இணைக்கும் என்று யோகராஜா கருதுகிறார்? [2]

**(c)** கருத்தரங்கு மூலம் யோகராஜா என்ன பலன்களை எதிர்பார்த்தார்? மூன்று பலன்களை எழுதவும். [3]

**(d)** ஒரு தலைமுறையிடமிருந்து மற்றொரு தலைமுறை விஷயங்களைக் கற்றுக்கொள்வது எப்படி உறவுகளை மேம்படுத்தும்? நாலாவது பத்தியில் இருந்து விடை தருக. [3]

**(e)** **(i)** புது திட்டம் பற்றி கல்யாணராமனுக்கு என்ன சந்தேகம் ஏற்பட்டது? [1]

**(ii)** பின்னர் இந்த திட்டத்தால் அவருக்கு என்ன பலன்கள் கிடைத்தன? [3]

[விடைகளுக்கு – 15 மதிப்பெண்கள், சிறந்த மொழித் திறன் – 5 மதிப்பெண்கள், மொத்தம் 20 மதிப்பெண்கள்]

**5** பின்வரும் வினாக்களுக்கு 140 சொற்களுக்கு மேற்படாமல் தமிழில் விடை தருக.

**(a)** தலைமுறை இடைவெளி பற்றி இரண்டு பகுதிகளிலும் கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து உங்கள் சொந்த வாக்கியங்களில் தரவும். [10]

**(b)** தலைமுறை இடைவெளி பற்றி உங்களுக்கோ உங்கள் நண்பருக்கோ ஏற்பட்ட அனுபவம் குறித்து ஐந்து வாக்கியங்கள் எழுதவும். [5]

[விடைகளுக்கு – 15 மதிப்பெண்கள், சிறந்த மொழித் திறன் – 5 மதிப்பெண்கள், மொத்தம் 20 மதிப்பெண்கள்]

© UCLES 2014

https://xtremepape.rs/

BLANK PAGE

© UCLES 2014 

https://xtremepape.rs/

**BLANK PAGE**



https://xtremepape.rs/

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.



https://xtremepape.rs/